**OS. 55/2017**

**நாள். 25.04.2022.**

**வா.சா. 1 –** முகம்மது முஸ்தபா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 2, 3, 9 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்...

2, 3, 9 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இந்த வழக்கில்நான் 3ம் வாதி என்றால் சரிதான். நாம் இவ்வழக்கில் 1, 2 ம் வாதிகளை ஏன் விசாரிக்கவில்லை என்றால் அவர்களை விசாரிக்கவேண்டிய அவசியமில்லை. என் தந்தை சையது இம்ராகிம் சாகிபு என்பவரது தந்தை பெயர் நைனா முகம்மது என்றால் சரிதான். நைனா முகம்மதுவின் மனைவி பெயர் மைமூன் அம்மாள் என்றால் சரிதான். என்.எஸ். என்ற இன்சியல் எங்களுடைய குடும்பத்தை குறிக்கக்கூடியது என்றால் சரிதான். என் தந்தை 17.11.1970 ல் இறந்தார் என்றால் சரிதான். என் தயார் 03.08.1985 ம் ஆண்டு இறந்தார் என்றால் சரிதான். என் தாய், தந்தையருக்கு முகைதீன் ஆசியாமரியம் மற்றும் வாதிகள் மற்றும் இவ்வழக்கில் கண்ட 1, 3 ம் பிரதிவாதிகள் மக்கள் என்றால் சரிதான். 1ம் வாதி சீனிசகுபருக்கு வயது 79 என்றால் சரிதான். 2ம் வாதி அகம்மதுஅப்துல்காதருக்கு வயது 77 என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி நைனா முகம்மதுக்கு வயது 75 என்றால் சரிதான். எனக்கு வயது 72. 1ம் பிரதிவாதி முகம்மது சதக்குத்தம்பிக்கு இறக்கும் போது வயது 76 என்றால் சரிதான். முகம்மது சதக்குத்தம்பியின் வாரிசுகள் தான் 10 முதல் 14 பிரதிவாதிகள் என்றால் சரிதான். என்னுடைய சகோதரி இறந்து போன முகைதீன் ஆசியாமரியம் என்பவருக்கு வாரிசுகள் 4 முதல் 8 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 4 முதல் 8 பிரதிவாதிகளுடன் உடன் பிறந்த சகோதரர் சீனி முகம்மது இறந்துவிட்டார் என்றால் சரிதான். சீனி முகம்மதுவின் மனைவி சித்திஜெசிமா இறந்துவிட்டார் என்றால் சரிதான். சித்திஜெசிமா என்னுடைய தம்பியான முகம்மது சதக்குத்தம்பியின் மகள் என்றால் சரிதான். சீனிமுகம்மதுவின் மகன் தான் 9ம் பிரதிவாதி நூருல்அக்சன் என்றால் சரிதான். நான் சென்னையில் இளங்கலை பொருளாதாரப்படிப்பை படித்தேன். நான் சட்டப்படிப்பையும் சென்னையில் தான் படித்தேன். 1977 முதல் 1982 வரை சென்னையில் வழக்கறிஞராக பயிற்சி செய்தேன். 1982 க்கு பிறகு நான் தாய்லாந்திற்கு சென்றுவிட்டேன். அங்கு தான் நான் இன்று வரை தாய்லாந்தில் தான்

நிரந்தர குடியுரிமை பெற்று வாழ்ந்து வருகிறேன். இந்த வழக்கு தாக்கல் செய்ய நான் தான் வக்கீலுக்கு விவரம் சொன்னேன். நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்வதற்கும் நான் தான் வக்கீலுக்கு விவரம் சொன்னேன். வாதிகளாகிய நாங்களும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் இறந்து போன என் சகோதரி முகைதீன் ஆசியாமரியம் ஆகிய அனைவரும் கீழக்கரையில் என் தாயாருக்கு பாத்தியப்பட்ட ஓ.ஜே.எம் தெருவில் உள்ள வீட்டில் குடியிருந்தோம். கீழக்கரையில் வாழும் இஸ்லாமியர்கள் காலம் காலமாக பின்பற்றும் வழக்கப்படி திருமணமான அன்று மணமகன் தன் தாயார் வீட்டிலிருந்து தன்னுடைய மனைவி வீட்டிற்கு செல்லும் வழக்கம் உண்டு என்றால் சரிதான். என்னுடைய முதல் மனைவி பெயர் சுலைகாமரியம். அவர் மூலம் செய்யது இர்சாத் என்ற ஒரு மகன் இருக்கிறார். என் தாயாருடைய வீட்டை கீழக்கரை திருமணத்தின் போது செய்யும் வழக்கப்படி என் சகோதரி முகைதீன் ஆசியாமரியத்திற்கு நான் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். அதன் பின்பு 1988 ல் நான் தாய்லாந்து சென்றுவிட்டேன். அங்கு சென்று நான் நிரந்தர குடியுரிமை வாங்கி தாய்லாந்து நாட்டை சார்ந்த கன்னிகா என்ற மைமூனா என்ற பெண்ணை திருமணம் செய்தேன். அவர் மூலம் எனக்கு முதலில் இரட்டை குழந்தைகளான ஹரிஸ் என்ற இம்ரான், ஹரின் என்ற இர்பான் பிறந்தார்கள். அதன் பிறகு சரூத் என்ற இன்சாத் என்ற மகன் பிறந்தார். அவர்கள் அனைவரும் தாய்லாந்து நாட்டின் பிரஜைகள் என்றால் சரிதான். நான் கீழக்கரையில் திருமணம் ஆன உடன் முதல் மனைவி வீடான கீழக்கரை ஓ.ஜே.எம் தெருவில் உள்ள வீட்டில் தான் வசித்து வந்தேன் என்றால் சரிதான். அதேபோல சீனிசகுபரும், அகம்மதுஅப்துல்காதரும், நைனாமுகம்மதுவும், லியாகத் அலிகானும், அவரது மனைவி வீட்டில் தான் வசித்து வருகிறார்கள். இறந்து போன 1ம் பிரதிவாதியும் அவரது மனைவி வீட்டில் வசித்து வந்து இறந்து போய் விட்டார் என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கு நடவடிக்கைகள் நேரடியாக தெரியும். இந்த வழக்கில் நான் 26.11.2019 ம் தேதி அனுமதிக்கப்பட்ட இ.மா.எண். 55/2017 மனுப்படி ஒரு முறை திருத்தியுள்ளேன். பின்பு 06.10.2021 ம் தேதி அனுமதிக்கப்பட்ட இ.மா.எண். 146/2021 மனுப்படி ஒரு முறை திருத்தியுள்ளேன். பின்பு 15.03.2022 ம் தேதி அனுமதிக்கப்பட்ட இ.மா.எண். 27/2022 மனுப்படி ஒரு முறை திருத்தியுள்ளேன். நான் என்னுடைய பிராதை 3 முறை திருத்தியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்யும் போது நான் படித்துப்பார்த்துத்தான்

கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். பிராதை 3 முறை திருத்தும் போது தாக்கல் செய்த அபிடவிட்டுகள் மற்றும் பிராதை படித்துப்பார்த்துதான் கையெழுத்து செய்தேன். 4ம் இலக்க சொத்தில் சுமார் 850 தென்னை மரங்கள் இருக்கும் என்றால் சரிதான். 5ம் இலக்க சொத்திலும் தென்னை மரங்கள் உள்ளது என்றால் சரிதான். 5ம் இலக்கத்தில் தென்னை மரங்கள் இருப்பதாக பிராது சொத்து விவரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 6ம் இலக்க சொத்தில் 1000 தென்னை மரங்கள் இருக்கும் என்றால் 300 தென்னை மரங்கள் இருக்கும். 7 ம் இலக்க சொத்தில் 1000 தென்னை மரங்கள் இருக்கும் என்றால் 600 தென்னை மரங்கள் இருக்கும். 7ம் இலக்க சொத்தில் கிணறு, வீடு உண்டு என்றால் சரிதான். ஆனால் அந்த விவரங்களை பிராது சொத்து விவரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 4ம் இலக்க சொத்தில் கிணறு மற்றும் பம்புசெட், பம்பு ஹவுஸ் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய வழக்கை மதிப்பிடும் போது தாவா சொத்துகளில் உள்ள தென்னை மரங்களையும், வீடு, கிணறு ஆகிவற்றின் மதிப்பை காட்டவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கின் சொத்துக்களின் மதிப்பை சரியாக நிர்ணயம் செய்யவில்லை என்றும், நான் செலுத்தியுள்ள நீதிமன்ற முத்திரை கட்டணமும் தவறானது என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய பிராது 4ல் தாவா 1 முதல் 7 இலக்க சொத்துக்கள் என்னுடைய தகப்பனார் செய்யது இம்ராகிம் சாகிபுக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய தந்தைக்கு 1 முதல் 7 இலக்க சொத்துக்கள் பாத்தியம் என்பதை காட்டுவதற்கு அவர் பெயரில் உள்ள பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றும், சமஸ்தானப்பட்டவோ, செட்டில்மெண்ட் பட்டாவோ, பட்டா பாஸ்புத்தகமோ, நிலவுடமை மேம்பாட்டுத்திட்ட பட்டாவோ, தற்போது நடைமுறையில் உள்ள பட்டவோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் 17.11.1970 ல் இறந்துவிட்டார். என் தாயார் 1985 ல் இறந்துவிட்டார். பொதுவாக ஒரு நபர் இறந்து அவரது சொத்துக்களில் பாகம் கேட்க வேண்டுமென்றால் 12 ஆண்டுகளுக்குள் பாகம் கேட்க வேண்டுமென்றால் சரியல்ல. என் தந்தை இறந்து 47 வருடங்கள் கழித்தும், என் தாயார் இறந்து 32 வருடங்கள் கழித்தும் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் உரிய காலத்தில் வழக்கு தாக்கல் செய்யாத காரணத்தால் இவ்வழக்கானது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் இதே தாவா சொத்துக்களுக்கு இதே

பிரதிவாதிகள் மீது இதே 3 வாதிகளும் சேர்ந்து இதே நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை கோரி ஓ.எஸ். நம்பர் 35/2016 தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கின் பிராது நகல் பி.சா.ஆ.1. அந்த வழக்கு நிலுவையில் இருந்த போது அதை நாங்கள் மேல்நடத்தவில்லை என்று சொல்லி நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்து வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் 1, 2 வாதிகள் தாக்கல் செய்த மெமோ தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அது பி.சா.ஆ.2. ஆனால் அதில் நான் கையெழுத்து செய்யவில்லை. ஓ.எஸ். நம்பர் 35/2016 வழக்கில் நான் என் வழக்கறிஞருக்கு வழக்கில் சம்மந்தப்பட்ட அனைத்து காரியங்களையும் பார்த்து கொள்வதற்கு அனுமதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 09.09.2016 அன்று நான் இந்தியாவில் இல்லை என்றும், தாய்லாந்தில் தான் இருந்தேன் என்றும் சொன்னால் இருந்திருக்கலாம், நிச்சயமாக சொல்லமுடியாது. பி.சா.ஆ.2 ல் என் வழக்கறிஞர் கையெழுத்து செய்துள்ளார் என்றால் இருக்கலாம். ஓ.எஸ். நம்பர் 35/2016 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை நகல் பி.சா.ஆ.3. அதன் தீர்ப்பாணை நகல் பி.சா.ஆ.4. அந்த வழக்கை நான் மேல்நடத்தவில்லை என்று நீதிமன்றம் பதிவு செய்ததன் அடிப்படையில் தான் நீதிமன்றம் தீர்ப்பாணை வழங்கி உள்ளது என்றால் சரிதான். ஓ.எஸ். நம்பர் 35/2016 வழக்கை திரும்ப பெற்றுக்கொண்டு அதே வழக்கு மூலத்தில் மீண்டும் வழக்கை தாக்கல் செய்தவற்கு நீதிமன்றத்தில் எவ்வித அனுமதியும் பெறவில்லைஎன்றால் சரிதான். 09.09.2016 அன்று தான் ஓ.எஸ். நம்பர் 35/2016 வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் பிரதிவாதிகளுக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கை மேல்நடத்தவில்லை என்று தாக்கல் செய்த பி.சா.ஆ.2 மெமோவை 09.09.2016 அன்றே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஓ.எஸ். நம்பர் 35/2016 வழக்கில் பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை போகவில்லை என்றும், நான் நீதிமன்றத்தை ஏமாற்றி வழக்கு தாக்கல் செய்யப்பட்ட தேதி அன்றே வழக்கை மேல்நடத்தவில்லை என்ற மெமோவை தாக்கல் செய்து உத்தரவைப் பெற்றுள்ளேன் என்றால் தவறு. நீதிமன்ற நடவடிக்கைகள் நன்கு எனக்கு தெரிந்துள்ள போதிலும் நீதிமன்றத்தை ஏமாற்றும் பொருட்டு பி.சா.ஆ.2 மெமோவை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தை ஏமாற்றக்கூடிய எண்ணம் படைத்த நபர் என்றும், அதனால் எனக்கு எந்தவித உத்தரவும் பெற தகுதி

கிடையாது என்றால் சரியல்ல. 2ம்பிரதிவாதி எந்த ஆண்டு, மாதம், தேதியில் எனக்கு பங்கு கொடுப்பதாக சொன்னார் என்ற விவரத்தை இந்த வழக்கிலும், ஓ.எஸ். நம்பர் 35/2016 வழக்கிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.2ல் 2ம் பிரதிவாதி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி தாவா சொத்துக்களில் எனக்கு பங்கு கொடுப்பதாக சொல்லி என் பெயருக்கு எந்தவித ஆதாரத்தையும் தனிப்பட்ட முறையில் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாய்மொழியாக சொன்னார். அந்த விவரத்தைஎன்னுடைய பிராது மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். இராமநாதபுரம் சரியத் கவுன்சிலில் நான் கொடுத்த மனுநகலை தாக்கல் செய்யவில்லை. இராமநாதபுரம் சரியத் கவுன்சிலில் நான் கொடுத்த மனுவில் 2ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை தன்னுடைய கைவசஅனுபவத்தில் வைத்துகொண்டு எங்களை தாவா சொத்திற்குள் உள்ளே நுழைய விடாமல் தாவா சொத்தின் பல பலன்களை எதுவும் தராமல் எங்களை ஏமாற்றி வருகிறார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ஆவணத்தில் என்னை நீதிமன்றத்திற்கு செல்லுமாறு அறிவுறுத்திய காரணத்தால் தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.11 பிறப்பித்த அமைப்பானது இந்திய சட்டங்களால் அங்கீகரிக்கப்படவில்லை என்றும், அது பதிவு செய்யப்பட்ட அமைப்பு இல்லை என்றும், அதில் பிறப்பிக்கப்படும் உத்தரவுகள் சட்டப்படி நிறைவேற்றம் செய்யக்கூடிய உத்தரவுகள் அல்ல என்றும் சொன்னால் சரிதான். பிராது பாரா 4ல் தாவா 8, 9 இலக்க சொத்துக்கள் இருப்பதாக சொல்லியுள்ளேன். இந்த வழக்கில் 7 இலக்க சொத்துக்கள் மட்டுமே இருக்கிறது என்றும் சொன்னால் சரிதான். 8, 9 இலக்க சொத்துக்கள் 5, 6 சொத்துக்கள் என்று ஏற்கனவே மாற்றம் செய்யப்பட்டுவிட்டது. ஆனால் அந்த விவரத்தை பிராதில் திருத்தம்செய்யவில்லை. பிராது வாதுரையில் ஆவணங்களை வா.சா.ஆ.1. முதல் 12 என்று குறியீடு செய்து இருப்பதாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு பரிகாரம்கோரி வழக்குரை தான் தாக்கல்செய்யவேண்டும் என்றும், நான் தாக்கல் செய்திருப்பது நிரூபணவாக்குமூலம் என்றும் அதனால் பிராது வனையப்பட்ட விவரம் தவறானது என்றும் அதன் அடிப்படையில் எனக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. பிராது 7ம் இலக்க சொத்தின் சர்வே நம்பர் 330/1, 330/2 என்றால் சரிதான். அந்த சொத்தை என் அண்ணன் 2ம் பிரதிவாதி 15ம் பிரதிவாதிக்கு

இனாம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். 09.08.2016 ம் தேதி 2ம்பிரதிவாதி 15, 16, 17 பிரதிவாதிகளுக்கு சர்வே நம்பர் 330/1, 330/2 ல் கண்ட சொத்துக்களை இனாம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பிராது பாரா 17 ல் 7ம் இலக்க சொத்தை 15, 16, 17 பிரதிவாதிகளுக்கு 2ம் பிரதிவாதி இனாம் செட்டில் மெண்ட் எழுதிக்கொடுத்ததாக சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. 10ம்பிரதிவாதி 18, 19 ம் பிரதிவாதிகளுக்கு தாவா 7ம் இலக்க சொத்தை விற்பனை செய்யவில்லை என்றால் சரிதான். 15, 16, 17 பிரதிவாதிகள் இந்த வழக்கில் கண்ட 7ம் இலக்க சொத்தை 20, 21 ம் பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்யவில்லை என்றால் சரிதான். தாவா 1 முதல் 3 இலக்க சொத்துக்களுக்கு என்னுடைய பிராதில் எந்த இடத்திலும் வழக்குமூலம் எதையும் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா 1 முதல் 3 இலக்க சொத்துக்களுக்கு நான் வழக்குமூலம் எதையும் சொல்லவில்லை என்பதால் 1 முதல் 3 இலக்க சொத்துக்களை பொறுத்து இந்த வழக்கானது நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. பிராதில் வழக்கு சொத்துக்கள் பிரதிவாதிகளில் கைவசத்தில் இருந்து வருவதாகவும் அவர்களிடமிருந்து 6/13 பங்கை பெற்றுத்தருமாறும் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் பிரதிவாதிகளின் கைவச அனுபவத்தில்இருப்பதாக பிராதில் நாங்களே ஒப்புக்கொண்டுள்ள காரணத்தினால் நீதிமன்ற முத்திரை கட்டண சட்டம் பிரிவு 37(2) ன் படி நான் செலுத்தியுள்ள நீதிமன்ற முத்திரை கட்டணம் தவறானது என்றும் பிரிவு 37(1) ன் படி தான் நீதிமன்ற முத்திரை கட்டணம் செலுத்திவைக்கவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை 2ம்பிரதிவாதியை நீக்கி மற்ற பிரதிவாதிகள் அனைவரும் பாகம் பிரித்து கொள்ள ஒப்புக்கொண்டார்கள் என்று நான் பிராதில் கூறியிருப்பதை நிரூபிக்கும் பொருட்டு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய பிராதிலும், நிரூபணவாக்குமூலத்திலும் சொல்லியுள்ள சங்கதிகளில் எது சரியானது என்றால் நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் தான் சரியானதாகும். 4 முதல் 7 இலக்க சொத்துக்களை நீக்க வேண்டும் என்று நான் மனுதாக்கல் செய்யவில்லை. பிராதிற்கு விரோதமாக நான் நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிராதில் உள்ள சொத்துக்களை திருத்தம் செய்ததால் அவ்வாறு உள்ளது. 1 முதல் 3 இலக்க சொத்துக்கள் நான் தாக்கல் செய்துள்ள பிராதில் செய்யது இப்ராகிம் சாகிபு என்பவருக்கு

பாத்தியப்பட்டது என்று பிராதில் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் பிராதில் கண்ட 1 முதல் 3 இலக்க சொத்துக்களில் பாதி கீழ்பகுதியில் உள்ள சொத்து எங்கள் தாயார் கருணைபீவிக்கு பாத்தியப்பட்டது என்றும், மீதமுள்ள பாதி சொத்து வாதிகளுக்கும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்டது என்றும் சொல்லியுள்ளோம் என்றால் 4 முதல் 9 பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்டது. என்னுடைய நிரூபணவாக்குமூலம் பாரா 2, 3, 4 ல் சொல்லியுள்ள விவரங்களை எங்களுடைய பிராதில் நாங்கள் சொல்லவில்லை என்றால் சரிதான். முதன்முறையாக மேற்கண்ட விவரங்களை நாங்கள் எங்களுடைய நிரூபணவாக்குமூலத்தில் தான் கூறியுள்ளோம் என்றால் சரிதான். மேற்சொன்ன விவரங்களை நாங்கள் எங்கள் பிராதில் சொல்லாததால் அதை மறுக்கக்கூடிய வாய்ப்பை பிரதிவாதிகளுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படாமல் அந்த விவரங்களை பிரதிவாதிகள் மறுக்கவில்லை என்பதால் நாங்கள் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலம் பாரா 2, 3, 4 ல் உள்ள விவரங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிராதில் மேற்படி விவரங்களை சொல்லாமல் நிரூபணவாக்குமூலத்தில் மேற்படி விவரங்களை சொல்லி நான் பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)